Trade Unionist and Socialist Coalition

# லண்டன் தேர்தல் - மே 3ம் திகதி

## தொழிற் சங்கங்கள் - சோசலிஸ்டுகளின் கூட்டமைப்புக்கு வாக்களியுங்கள்

வங்கிகளும் பெரும் வியாபாரிகளும் ஏற்படுத்திய பொருளாதார நெருக்கடிக்கு எம்மை பலியாக்க முயற்சிக்கிறது தற்போதய அரசாங்கம். எமக்கான சேவைகளை வெட்டுவது மட்டுமின்றி நிவாரனச் சலுகைகளையும் கொஞ்சம் கொஞ்சமாக ரத்துச் செய்து வருகிறது அரசு. அதி செல்வந்தர்களுக்கு வரிச் சலுகை செய்து கொடுக்கும் அதே சமயம் சாதாரன மக்களுக்கான வரியை அதிகரித்துள்ளது. அத்தியாவசிய வைத்திய சேவைகள் மற்றும் பாடசாலைகளைத் தனியார்மயப்படுத்தி மேலும் முதலாளிகளுக்கு செல்வம் சேர்க்க வழியேற்படுத்திக் கொடுப்பது மட்டுமே எல்லாக் கட்சிகளினுதும் கொள்கையாக இருப்பதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள்.

இதை எதிர்த்து எமது சேவைகளையும் எமது உரிமைகளையும் பாதுகாத்துக்கொள்ள போராட நாம் முன்வரவேண்டும். நெருக்கடியைக் காரனம் காட்டி எம்மிடம் பணம் புடுங்கும் கொள்கையை நாம் எதிர்க்க வேண்டும். முதலாளிகள் உருவாக்கிய நெருக்கடிக்கு முதலாளிகளே விலை செலுத்தவேண்டுமெயன்றி நாமதற்கு பலிகடாவாகமுடியாது.

கூட்டாக ஆட்சி செய்யும் கன்சவேட்டிவ் கட்சியோ அல்லது லிபரல் கட்சியோ எமது நலன் சார்ந்து இயங்கவில்லை என்பது தெட்டத் தெளிவான விசயம். எதிர்கட்சியாக இருக்கும் லேபர் கட்சியோ சேவைகளை வெட்டுவதை முழமையாக எதிர்க்காது கொஞ்சம் கொஞ்சமாக வெட்டச் சொல்லி ஆலொசனை வளங்கும் கேவலமான அரசியலையே செய்கிறது.

கடுமையாக உழைக்கும் எமது நலன்களைப் பிரதிபலித்து எமக்காக போராடும் கட்சி என்று இன்று ஒரு கட்சியும் கிடையாது. அவ்வாறு ஒரு கட்சியைத் தோற்றுவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் தொழிற் சங்கங்கள் மற்றும் சோசலிஸ்டுகள் இணைந்து “தொழிற் சங்கங்கள் - சோசலிஸ்டுகளின் கூட்டமைப்பு“ என்ற அமைப்பை உருவாக்கியிருக்கிறார்கள்.

இந்த அமைப்பு வரும் மே 3ம் திகதி நடக்க இருக்கும் தேர்தலில் லண்டன் அசெம்பிளி இருக்கைகளுக்காக போட்டியிடுகிறது. தொழிலாளர்களான எமது குரல்  லட்டன் அரசியலில் ஒலிக்க வேண்டுமானால் இவ்வமைப்புக்கு வாக்களியுங்கள்.

தொழிற் சங்கங்கள் - சோசலிஸ்டுகளின் கூட்டமைப்பு

## தேர்தல் உறுதிகள்

- அனைவருக்குமான வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்துதல்
- முழமையாக நிதி வழங்கி பொதுநல சேவைகளை பாதுகாத்தல்
- தனியார்மயப்படுத்தலை நிறுத்தி லாபத்தை முதன்மைப்படுத்தாது மக்களை முதன்மைப்படுத்தல்
- குறைந்த கட்டன மற்றும் திறனுள்ள போக்குவரத்து சேவையை உருவாக்குதல்.
- துவேசத்துக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்தல்.
- இலவச கல்விச் சேவையை உறுதிப்படுத்தல்.
- அனைவருக்கும் கட்டுபடியாகும் வீட்டு வசதிகளை ஏற்படுத்தல்.

நீங்களும் இவ்வமைப்புடன் இனைந்து உங்கள் எதிர்ப்பைப் பதியுங்கள்.

TUSC AGAINST CUTS

www.tusc.org.uk

Printed and Promoted by C Heemskerk on behalf of Trade Unionist and Socialist Coalition, 17 Colbert House, London E1 4JP